2. நன்றி நவிலல்

கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளத்தில் மருத்துவக் கல்லூரி தொடங்கிட அனுமதி பெற்றுத் தந்த முதலமைச்சருக்கு நன்றி

டாக்டர் தே. குமாரதாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன குமாரதாஸ்? சொல்லுங்கள்.*

டாக்டர் தே. குமாரதாஸ்: *நன்றி சொல்வதற்கு அனுமதி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய மருத்துவக் கல்லூரிகளுக்கு 250 மாணவர்களைச் சேர்க்கிறமுகத்தான் அனுமதியைப் பெற்றுத் தந்த டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிற நேரத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) நெல்லை எங்களுக்கு எல்லை, குமரி எங்களுக்குத் தொல்லை என்று வசை பாடிக்கொண்டிருந்த கருணாநிதியினுடைய அரசியல் சகாப்தத்தை முடித்து, நெல்லை மட்டுமல்ல, குமரியும் எங்களுக்குச் சொந்தம் என்று சொல்லி அதை நிலைநாட்டுகின்ற முகத்தான் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இந்த மருத்துவக் கல்லூரியைத் தந்ததில் குமரி மாவட்ட மக்கள் சார்பாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல்...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், போதும், நன்றி சொல்லி முடியுங்கள். திரு. பச்சைமால். (குறுக்கீடு) போதும், போதும்.*

டாக்டர் தே. குமாரதாஸ்: *ஒரேயொரு நிமிடம் கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பச்சைமால் பேசி முடிக்கட்டும்.*

திரு. தா. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஆசாரிப்பள்ளத்தில் இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரி தொடங்கிட அனுமதி பெற்றுத்தந்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்ட மக்களின் சார்பாகவும், குளச்சல் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

SATYAMEVA JAYATE TRUTH ALONE TRIUMPHS

டாக்டர் தே. குமாரதாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரியில் 300 படுக்கை வசதிகொண்ட மருத்துவமனைக் கட்டடம் கட்டுவதற்கு அரசாணை எண் 219, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 19-11-2002-ன்படி ரூ.5 கோடி அனுமதிக்கப்பட்டு, கட்டடம் கட்டி முடிக்கின்ற சூழ்நிலையில் இந்த மருத்துவக் கல்லூரிக்குத் தேவைப்படும் கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு மேலும் ரூ.45.80 கோடி, தற்போது அரசாணை எண் 244, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 23-7-2004-ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய் எங்களுக்கு, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி கட்டுவதற்கு அனுமதி தந்த டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு குமரி மாவட்ட மக்களின் சார்பாக நன்றிகள் கோடி, கோடி என்று கூறி இதற்கு உறுதுணையாக இருந்த நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தளவாய் சுந்தரம் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல கட்டடங்கள் கட்டுவதற்கு, துரிதப் பணிகளை மேற்கொண்டிருக்கிற நமது பொதுப் பணித் துறை அமைச்சர் மாண்புமிகு பன்னீர்செல்வம் அண்ணாச்சி அவர்களுக்கும் குமரி மாவட்ட மக்களின் சார்பாக இதயம் கனிந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும், நன்றியையும் கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-25

3. கவன ஈர்ப்பு

லால்குடி தொகுதி, மாந்துறை–பூவாளூர் புறவழிச்சாலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எஸ்.எம். பாலன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. எஸ்.எம். பாலன்.

***திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி தொகுதியில் சிமெண்ட் ஆலைகளிலிருந்து திருச்சி-சிதம்பரம் சாலையில் செல்லும் கனரக